உ
சிவமயம்



வீரசெங்குந்த முதலி மரபில் உதித்த
இல 68, சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

அமரர்

# செல்வி கமலாம்பிகை வல்லிபுரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# கமல மலர்

03.07.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வீரசெங்குந்த முதலி மரபில் உதித்த

இல 68, சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

அமரர்

# செல்வி கமலாம்பிகை வல்லிபுரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

வெளியிடப்பட்ட

# கமல மலர்

03.07.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பிற்கோர்அணிகலமாய்
பண்பின் பெட்டகமாய்
உண்மையின் உறைவிடமாய்
ஊருக்கு மணிவிளக்காய்
வெண்ணிலவின் தண்ணொளியாய்
மண்ணகத்தின் மாணிக்கமாய்
பெண்ணின் பெருந்தகையாய்
பண்பிற் சிறந்த சகோதரி
கணப்பொழுதில் பிரிந்து சென்றதேனோ?
கண்ணீரைப் பரிசாய்த் தந்ததேனோ?
தீயில் சங்கமமாகி திருநீறாய் போனாயே
மண்ணில் உதித்தோர்க்கு
மரணமே நியதியாம்
எல்லாம் அவன் செயல்
எம் செயல் யாதுமில்லை
என்பதை உணர்ந்திடும் நாம்
சகோதரியின் பாதார விந்தங்களுக்கு
இம்மலரினைக் சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வீர செங்குந்த முதலி மரபிற் பிறந்த

# அமரர்

# செல்வி கமலாம்பிகை வல்லிபுரம்

மண்ணில் அவர்கள் விண்ணில்

**30.01.1946** **19.06.2009**

## *திதி வெண்பா*

ஆண்டு விரோதி வருடம் ஆனி 5ஆம்நாள்
பூண்ட அபரபக்க ஏகாதசி திதியதனில்
கமலாம்பிகை என்னும் மாங்கை நல்லாள்
போய்ப் புகுந்தாள் வெள்ளைவிநாயகன் பாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார்
புத்திரரார் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமாம்
இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் செந்தீ
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றழுவார் இருவிசும்பில் இருக்கலாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே
மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம்
பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப்
போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய
போற்றி போற்றி

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறித் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறவுழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மணிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

## திருப்புகழ்

கருவிலுரு வாகிவந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து - அதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாக நொந்து - மிகவாடி
அரகரசிவாய வென்று தினமுநினை யாமல் நின்று
அனுசமய நீதியொன்றும் - அறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அனுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபட மேவளர்ந்த பெரியபெரு மாளரங்க
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற பெருமாளே

## வாழ்த்து

மறையொடு சைவம் வாழ்க மானிலம் செழித்து வாழ்க
கறைமிடற் றண்ணலார்தம் அடியவர் இனிது வாழ்க
பொறையொடு வாய்மைபோற்றிப் புவியினில் மாந்தரெல்லாம்
பிறைதவழ் சடையினாரின் அருளினால் நீடுவாழ்க

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப்பா

இந்துமா ஆழியில் இலங்குகின்ற முத்தாம்
ஈழமணித் திருநாட்டின் வடபால்
இலங்கு புகழ் யாழ்ப்பாண பதியருகில்
வடமராட்சியென்னும் வளம்மிக்க ஊர்தனில்
கரவை வேலன் கோவை எழுந்த
கரவைப் பதியதனில் வேலனை வணங்கும்
வேல்பிடித்த செங்குந்த மரபுதன்னில்
யார்க்கரு விநாயகர் பாதம் போற்றி
வாழ்ந்து வந்த முருகேசுவும் சிவகாமி நல்லாளும்
இயற்றிட்ட அருந்தவப் பயனினால் வல்லிபுரம் - எனும்
பண்பாளன் பாரினிலே அவதரித்து பண்புடனே
வாழ்ந்திருந்த வேளைதனில் அக்குலத்தில்
அருந்தவங்கள் பல இயற்றிய - செல்லம்மா
என்னும் நல்லாளை - உரிய
வயதில் கரம்பிடித்து இல்லறமாம் நல்லறத்தில்
இனிதாக வாழ்ந்திருந்தாள் தவங்கள் பல இயற்றி
அறங்கள் பல செய்ததனால் - இவ்வுலகில்
பத்துச் செல்வங்களைப் பெற்றெடுத்து - மூத்தமகளாம்
யோகமுள்ள யோகாம்பிகை எனும் நல்லாளையும்
சாந்தகுணம் படைத்த ஆனந்த சிவத்தையும்
கமல உள்ளம் படைத்த கமலாம்பிகையையும்
பிரான்ஸ் வாழ் லலிதாம்பிகை எனும் சித்திரப்பாவையையும்
ஞானமான ஞானாம்பிகையையும் - குழந்தை
உள்ளம் படைத்த கங்காதரனையும் - பொறுமை
உள்ளம் கொண்ட ஸ்ரீதரனையும் - ஆனந்தமான
மனோகரனை கடைக்குட்டியாய் பெற்றெடுத்து
பிள்ளைகளை நன்மக்களாய் வாழவைக்க எண்ணி
கனடா வாழ் யோகாம்பிகைக்கு பாலச்சந்திரன் - என்னும்
கருணை உள்ளம் கொண்ட வரனையும்
மட்டக்களப்பாம் சிவஞானத்திற்கு அருளம்மா - என்னும் நங்கையையும்
ஜெதாம்பிகைக்கு சிவராமலிங்கம் - என்னும் ராமனையும்
கொழும்பு வாழ் ஆனந்தசிவத்திற்கு ஓய்வுபெற்ற ஆசிரியையாம்
இனிமையான இந்திராதேவியையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் வாழ் ஞானாம்பிகைக்கு நல்ல உள்ளம் கொண்ட
நல்லநாதனையும்
சிரேஷ்ட உதவிப் பதிவாளர் வவுனியா வளாகமாம் ஸ்ரீதரனுக்கு
ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் யாழ் பல்கலைக்கழகமாம்
தவமணிதேவி எனும் பெருந்தக்க பெண்ணையும்
கனடா வாழ் மனோகரனுக்கு மாலதி எனும் மங்கை நல்லாளையும்
தம்மக்கட்கு தாரமாக ஆக்கிவிட்ட வேளைதனில்
தம் கடமை முடிந்ததென்று போய்ச் சேர்ந்தார்
வல்லிபுரம் செல்லம்மா யார்க்கரு விநாயகர் பாதம்
கமலாம்பிகை எனும் நல்லாள் சிவப்பிரியன் லாவண்யா
அம்பிகை பிரியதர்ஷன் எனும் மருமக்களை - அன்பாக
வளர்த்து வந்து மோகன முரளி ஜனகன் ஜெகன்மோகன்
மோகனசுதன் என்போருக்கு பெரிய தாயாக இருந்து
தனது அன்பையும் பாசத்தையும்
ஊற்றாக வழங்கி வந்த வேளைதனில் - மிகுதி நேரத்தில்
ஆங்கில போதனாசிரியராக கடமையாற்றி
சகோதரங்கள் ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூண்டி திக்கட்டும் புகழ்பரப்பி
சித்திரப் பதுமைகளாய் வாழ்ந்து வரும் சிறப்பினைக் கண்ணுற்று
வெள்ளை விநாயகன் தஞ்சமென
வாழ்ந்து வரும் நாள் தன்னில்
விதியின் சதியினால் மைத்துனன்மார் - சிவராமலிங்கத்தையும்
பாலச்சந்திரனையும்
காலனவன் பறித்துவிட அத்துயர் தாங்காது
வெள்ளை விநாயகன் அழைப்பு
கிடைத்தவுடன் போய் வருகின்றேன் என்று
சொல்லாமல் கொள்ளாமல் மின்னாமல் முழங்காமல்
பாய் தன்னில் படுக்காமல் உற்றார் கதறியழ - ஊராரும்
சேர்ந்தழ சகோதரங்கள் விம்மியழ
மருமக்கள் துடிதுடித்தழ மண்ணழ மரமழ
முற்றத்து அறுகழ இடைநடுவில் தனது
வாழ்க்கையை செல்வியாகவே முடிந்து விட்டதென்று
பெற்றுவிட்டாள் முத்திதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டக்கூத்தர் செங்குந்த மரபினர் என்றும், அவர் ஈட்டியெழுபது எனும் பிரபந்தத்தைப் பாடுவதற்காக எழுபது தலைப் பிள்ளைகளின் தலைகளை கேட்டுப் பெற்று அத்தலைகளை இருக்கையாக அடுக்கச் செய்து அத் தலைகளின் மேல் இருந்து செங்குந்தர் என்ற சமூகத்தின் வீரத்தையும், தியாகத்தையும் உலகுக்கு உணர்த்துவதற்காக அதனைப் பாடினார் என்று பண்டைய வரலாறு கூறுகின்றது.

செங்குந்தர் என்போர் கைக்கோளர் என்றும் அழைக்கப்பட்டனர். கந்தக் கடவுள் சூரனைக் கொல்வதற்காக வீரபாகு தலைமையில் வீரசெங்குந்த படைகளை அனுப்பியதாக கந்தபுராணம் கூறுகிறது. குமரக் கடவுளிற்கு "சேவற்கைக் கோளன்" என்ற பெயருமுண்டு. இப்போது யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில், சட்டநாதர் சிவன்கோயில், திருநெல்வேலி காயாரோகணர், திருச்செந்தூர் முருகன் கோவில்களில் சூரன்போர் விழாக்களில் கந்தக் கடவுளின் சேனாவீரர்கள் வீதிவலம் வருவதை காணக்கூடியதாக உள்ளது. ஒட்டக்கூத்தர் சோழ அரசவையில் அரசசபைக் கவிஞராகவும், அரச ஆலோசகராகவும் விளங்கினார். சோழர் இலங்கையைக் கைப்பற்றிய காலங்களில் அரசற்கு உறுதுணையாக இருந்த படைகளில் கைக்கோளப்படையும், தூதுப்படையும் (மரணப்படை) இருந்ததாக ஆதாரம் கூறுகின்றது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தை ஆரம்பித்து தமிழ்நாடு கண்ட காஞ்சிபுர நடராஜமுதலியார், அண்ணாத்துரை புரட்சி கவிதைகள் மூலம் புதுமையை கணீரென்ற குரல் வளத்தாலும், சொல்லாற்றல் மூலமும் தினமும் பிரசங்கம் செய்து "உடற்பொருள் ஆவி" அனைத்தையும் தமிழிற்கும், சைவத்திற்கும் அர்ப்பணித்த திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற மேற்சொன்ன பல செங்குந்தர்கள் தமிழகத்திலும், ஈழத்திலும் வாழ்ந்தார்கள்.

இதேபோன்று இலங்கையிலும் எரிமலை எழுத்தாளர் என்று இலங்கை விஜயத்தின் போது கல்கியால் கூறப்பட்ட மூத்த பத்திரிகை ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் அடவேறு மு.ஆலாலசுந்தரம் போன்ற பலர் ஈழத்திலும், தமிழிற்கும், சைவத்திற்கும், அரசியல் வாழ்விற்கும் பணிபுரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழரின் பண்டைய வரலாற்றினை அறியாத பல பழைய, இளைய சந்ததியினருக்கு இவ்விடயங்களை எடுத்துக்காட்ட கொடிச்சீலை கொடுக்கும் வரலாறு இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. இவ் வம்சத்தினரைப் பற்றி எமது முன்னோர்கள் சிலருக்கு தெரிந்த விடயம் நல்லூர் ஆலயத்திற்கு கொடிச்சீலை வரலாறானது முருகப் பெருமானின் சகோதரர்களாகியும், படைவீரர்களாயும், நவவீரருடைய வம்சாவழியினராகிய செங்குந்தர் கள் பாவமற்ற தொழிலெனக் கருதி திருவள்ளுவர் மேற்கொண்ட நெசவுத் தொழிலையே கைக்கொண்டார்கள். காலம் செல்லச் செல்ல நெசவுத் தொழிலை கைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபட்டனர். எனினும் சிலர் இதனைக் கைக்கொண்டு தான் இருக்கின்றார்கள். எனினும் அவர்கள் வழிவந்த கைக்கோளர்களே இன்று நல்லையம் பதியில் கொடிச்சீலை கொடுத்து வருகின்றார்கள்.

பாவோடிக் கொண்டிருந்த செங்குந்தர் வீதியை மறைஞான சம்பந்தர் நண்ணிவிட்டார். தாகம் தாங்கமுடியாத நிலையில் அங்கு நின்ற செங்குந்தர்களை தாக சாந்திக்கு ஏதும் தரச் சொன்னார். செங்குந்தர்கள் பாத்தோயும் கஞ்சிக் கூழைவிட வேறு ஒன்றுமில்லை என்றார்கள். பரவாயில்லை அதையாகிலும் தாருங்கள் என்றார். செங்குந்தர்கள் பாத்தோயும் கஞ்சிக் கூழை சட்டியால் அள்ளிவார்க்க அதை ஞானசம்பந்தராகிய பிராமணர் இரு கைகளையும் நீட்டி கை மண்டையில் குடித்தார். குரு பக்தி கொண்ட உமாபதி சிவாச் ..ரியராகிய பிராமணர் சம்பந்தரின் கைகளால் நிறைந்து வழிந்து அவருடைய முழங்கைகளினால் ஊற்றுண்ட கூழை தமதிருகை களாலும் ஏந்திக் குடித்தார்.

இச்செயற்கருஞ் செய்கையை அறிந்த மற்றைய தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியின் செய்கையை நன்குணராது அவரைப் பழித்தனர். அரசனுக்கும் முறையிட்டனர். நடேசப் பெருமானுக்கு பூசை செய்யலாயக்கற்றவர் என்றும் முறையிட்டனர். இதைக் கேட்டவுடன் திரியம்பகச் சோழன் உமாபதி சிவாச்சாரியாரை அன்று முதல் சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு பூஜை செய்வதிலிருந்தும் நிறுத்தி வைத்தான். மன்னனால் அவமானப்படுத்தப்பட்ட உமாபதியார் செங்குந்தர் வாழும் கொற்றவன் குடியில் சென்று அஞ்ஞாதவாசம் செய்தார். நடராசரிடம் முறையிட்டுக் கொண்டு அவரே தஞ்சமென்று வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவருக்கு கொற்றவன் குடி முதலி என்ற பெயர் வந்தது. அவருடைய சமாதி கொற்றவன் குடியில் தான் அமைக்கப் பட்டிருக்கின்றது.

மார்கழி மாதம் சிதம்பரத்தில் உற்சவ காலம் கிட்டியது. தில்லைவாழ் அந்தணரால் கொடுக்கப்பட்ட கொடிச்சீலை அரைக் கம்பத்தில் ஏறி அறுந்து விழுந்தது. பலமுறை ஏற்றியும் பலனில்லாது போனது. அரைக்கம்பத்தில் ஏறி அறுந்ததினால் போலும் இன்றும் பெரியோர் மறைந்தால் எங்கும் அரைக்கம்பத்தில் கொடிபறக்க விடுகிறார்கள். ஏதோ மூர்த்தி காரியம் பிழைத்துவிட்டதென்று அஞ்சி அரசனும் தில்லைவாழ் அந்தணரும் நடராஜப் பெருமானிடம் பணிந்து தம் பிழைகளைப் பொறுக்குமாறு விண்ணப்பித்தார்கள். உடனே அசரீரி வாக்கு "உமாபதி சிவாச்சாரியார் பூசகராகி அவர் பருகிய கூழைக் கொடுத்த செங்குந்தர் நெசவு செய்து அவர்களால் கொடுக்கும் கொடிச்சீலையையே நமக்குப் பிரீதி" என்று கூறிற்று. இதைக்கேட்ட தில்லைவாழ் அந்தணர்களும், அரசனும் ஏங்கி தங்கள் பிழைகளைப் பொறுக்கும்படி மன்னிப்புக் கேட்டு கொற்றவன் குடிக்குச் சென்று உமாபதிசிவாச்சாரியாரை சாஷ்டரங்கமாக நமஸ்கரித்து அவரைப் பூசகராக ஏற்கும்படி அரசன் வேண்டிக் கொண்டான். மதுரைப் புராணப் பாட்டானது செங்குந்தர் வீதியில் செங்குந்தரிடம் பிச்சைவாங்கி சாப்பிட்டால் சகல பாவங்களும் தீரும் எனும் கருத்தைப் புலப்படுத்துகின்றது.

கொடிச்சீலை தினத்தன்று நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து மேளவாத்தியம் முதலியன செங்குந்தர் வீதிக்கு கொடிச்சீலை கொண்டுவர அனுப்பப்படுகின்றது. எந்த கோவில்களுக்கும் கொடிச் சீலை மிகவும் புனிதமாக தாம்பாளத்தில் வைத்து உபயகாரர்களால் தலையிலே சுமந்து கொண்டு மங்களவாத்தியம் முழங்க சென்றடை யும். ஆனால் நல்லூர் கந்தசாமி கோவில் கொடிச்சீலை அப்படியல்ல. இக் கொடிச்சீலையைக் கொடுக்கும் செங்குந்தர்கள் தங்களுக்கு இயன்ற பொருளுதவி கொடுத்து செய்யப்பட்ட ஒரு சிறு தேரில் ஏற்றிச் சென்று பிரதம குருக்களிடம் கையளிப்பார்கள். இவை யதார்த்த ரீதியாக இடம்பெற்று வருகின்றது.

செங்குந்தர்கள் கல்வியங்காடு, கரவெட்டி, முள்ளியவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, இந்தியா போன்ற பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தமிழகத்தில் செங்குந்த முதலியார்கள் என்ற பெயரோடே வாழ்கின்றனர். இந்தியாவில் இருந்து பருத்திநூல் இறக்கியபடியால் பருத்தித்துறை எனப்பட்டது. செங்குந்த மக்களுக்காகவே முதல் முதலில் பருத்திநூல் இறக்குமதி செய்யப்பட்டது. இந்த செங்குந்தர்களாகிய கைக்கேளர் என்பவர் கைக்கோவளம் எனும் இடத்தில் இறக்கியபடியால் அது இன்றுவரை அப்பெயரோடு வழங்குகின்றது. இதன்படியாக சென்றடைந்த இவர்கள் ஆலயங்களை அமைத்து குடாநாடு பூராக குடியேறினர். இவர்கள் ஆங்காங்கே கொடிச்சீலையை கொடுத்து தவினர். இந்தியாவிலிருந்து ஏழுவத்தைகளில் (தோணிகளில்) வந்தவர்களைக் குடியேற்றிய இடமே திருநெல்வேலியிலுள்ள ஏழுவத்தை என்ற இடமாகும். இந்தியாவிலிருந்து வள்ளத்தில் கற்கள் பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து செங்குந்த மக்கள் தொடர்ச்சியாக நின்று கைகளால் கற்களை மாறி மாறிக் கடத்தியே கரவெட்டி கிழக்கிலுள்ள யார்க்கரு விநாயகர் ஆலயம் செங்குந்த மக்களால் கட்டப்பட்டது.

கொடிச்சீலை கொடுக்கும் மரபாக வந்த கோவில்களாவன வல்லிபுரக் கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், வயல்வெளி கந்தசாமி கோவில், ஒட்டிசுட்டான் சிவன் கோவில், யார்க்கரை பிள்ளையார் கோவில், மட்டக்களப்பு ஆணைபந்திப் பிள்ளையார் கோவில், நல்லூற் சட்டநாதர் கோவில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர், கரவெட்டி நுணுவில் பிள்ளையார், மாமாங்கேஸ்வரர், தமிழகத்தில் ^நம்பரம் போன்றன குறிப்பிடத்தக்கன.

ஒட்டக்கூத்தர், அறிஞர் அண்ணா, திருமுருக கிருபானந்த வாரியார், நாவலர் நெடுஞ்செழியன், படிக்காசுப் புலவர், இரட்டைப் புலவர், அந்தகக்கவிவீர இராகவமுதலியார், புதுமை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஆபிரிக்காவில் மகாத்மாகாந்தியுடன் சுதந்திரப் போரில் ஈடுபட்ட தில்லாடி வள்ளியம்மை, இந்திய சுதந்திர போராட்டத்தில் கொடிகாத்து இன்னுயிர் நீத்த திருப்பூர் குமரக்குமரன், சடையம்மா, யோகர் கார்த்திகேசு ஆகியோர் நினைவுகூறக் கூடியவர்கள்.

இவையெல்லாம் வருங்கால சரித்திர ஆவணத்திற்கு சேர்கப்பட வேண்டியவை. இன்றைய செய்திகள் நாளை சரித்திரம்.

தொகுப்பு :

**செல்வி சுகி சுப்பையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் இந்து மகளிர் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் புஷ்பா செல்வநாயகம் அவர்களின் ஆறாத்துயர்

'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த ஞானச் செருக்கும்'' என்ற பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக எம்மிடையே திறம்பாத நிலை பேணி வாழ்ந்து மறைந்தவர் கமலா. பல்துறைசார் விழுமியங்களை தன்னகத்தே கொண்டு அரும்பணிகள் பல ஆற்றியவர். கொழும்பில் வசித்த வேளை வீரகேசரி முதலிய முன்னணி பத்திரிகைகளுக்கு வித்யாதானம் செய்ததுடன் வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றி தன் முத்திரையைப் பதித்தவர். யாழ்ப் பாணத்தில் வாழும் பேறுபெற்ற இவர் உற்றார், உறவினர், அயலவர் என அனைவருடனும் இன்முகத்துடன் பழகி உரையாடியதுமல்லாது மற்றும் பலரையும் நாடிச் சென்று அவர்களுடன் மகிழ்ந்தனர். நியமம் வழுவாது கோயில் வழிபாடு, பஜனைகள் எனப் பல சமய நிகழ்ச்சிகளிலும் பங்காற்றி நிறைவாழ்வு வாழ்ந்தவர். தன் மாணவ மாணவிகளுக்கு அவரவர் வயது, தராதரம், தகைமை முதலிய வற்றிற்கேற்ப அன்புடன் பழகி ஆங்கிலம் பயிற்றுவித்தும் நல்லாசா னாகத் திகழ்ந்தவர். தனது எதிர்பாராத இறுதி முடிவினை முன் கூட்டியே அறிந்து நம்பகமாக ஒரு சிலருக்கு அது சார்பாக எதிர்வு கூறியவர். அவரது திடீர் மறைவு எம் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அனைவரது அன்புக்கும் பாத்திரமான கமலா இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிந்து செல்வார் என்று எவரும் அறியார்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்

பெருமை உடைந்து இவ்வுலகு'' எனும் வள்ளுவரது வாய்மொழிக்கிணங்க நேற்றிருந்த ஒருவன் இன்று இல்லை என்ற நிலைமையை விளக்கும் வகையில் கமலாவின் திடீர் பிரிவு நிகழ்ந் தது எம் அனைவரையும் உலுக்கிவிட்டது. இவ்வுலகை விட்டு அவர் மறைந்து விட்டாலும் அவரது அந்த அன்பு நினைவு எம் அனைவரது உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று மனமுருகிக் கூறி அவரது ஆத்மா சாந்தியடைய இருகரம் கூப்பி வணங்கி நிற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது இதயம் சிறப்பாக இருக்க 27 வழிகளை தேடுங்கள்

1. வழக்கமான உணவு நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகப் பசி யெடுத்தால் அப்போது பிஸ்கட், கேக், தேநீர் சாப்பிடுவதைத் தவிருங் கள். பசித்தீ மிகவும் எரிந்தால் கலோரி குறைவான பானம் அருந்துங்கள்
2. புதுப்புது வகையான உணவு வகைகளை கண்டு மயங்காதீர்கள். வழக்கமான உணவே நம்பகமான உணவு என நம்புங்கள்.
3. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி இவைகளைக் கூடுமானவரை தவிர்த்து, மீன், கோழி இவைகளை அளவோடு உண்ணுங்கள்.
4. தொட்டுக்கொள்ள என சட்னி, சோஸ், ஜாம், ஊறுகாய் போன்ற அனைத்தையும் ருசித்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.
5. சாக்லேட், ஐஸ்கிறீம் கூடியவரை வேண்டாம்.
6. கொழுப்புச்சத்து குறைவான உணவுகளே சிறந்தது.
7. வாடி வதங்கிய காய்கறிகளைப் பயன்படுத்த வேண்டாம். அவற்றிலுள்ள விட்டமின் "சி" காணாமல் போயிருக்கும்.
8. தேங்காயெண்ணெய், பாமாயில் தவிர்த்து சோள எண்ணெய், ஆலிவ் எண்ணெய் பயன்படுத்தலாம்.
9. மீன்களை பொரிப்பதை விட வேகவைத்தே உண்ணுங்கள்
10. பேரீச்சம்பழம், உலர் திராட்சை இவைகளை அடிக்கடி உண்ணுங்கள்.
11. இயன்றவரை உப்பைக் குறையுங்கள் அதுவே உயிருள்ள வரை இதயத்தைக் காக்கும்.
12. எலுமிச்சை, வெங்காயம், பூண்டு, மிளகு, கடுகு, ஜாதிக்காய் இவற்றின் தினமும் சூப் செய்து சாப்பிடுங்கள். உப்பு சேர்க்க வேண்டாம்.
13. தோலுடன் அவித்த உருளைக்கிழங்கு மிகச் சிறந்த நார்ச்சத்து என்பதால், மறக்காமல் சேருங்கள்.
14. வீட்டில் அலுமாரியில் டப்பாக்களில் சேர்த்து வைத்து உண்ணும் "கொரிக்கும்" சமாச்சாரங்களைத் தவிருங்கள்.
15. சோறு, ரொட்டி, கூழ், களி இவைகள் அனைத்தும் வயதிற்கேற்ற ஏற்ற உணவுகள் அளவுடன் சாப்பிட்டுப் பழகுங்கள்.
16. கூடுமானவரை எதையும் எண்ணெயில் வதக்காமல், வறுக்காமல் வேகவைத்தே முற்றும் வேகாமல் உண்ணுங்கள்.
17. காய்கறிகளை பெரிய துண்டுகளாக வெட்டி சமைக்கவும்.
18. வாரத்திற்கு மூன்று, நான்கு முட்டைகளுக்குள் நிறுத்தி விடுங்கள் இன்னும் வேண்டுமெனில் வெள்ளைக் கருவுக்குத் தடையில்லை.
19. சிகரெட், குடிப்பழக்கம் அபாயகரமானது. இந்த ஞாபகம் வந்தால் வேகமாக பத்து நிமிடம் நடந்தால் போதும்.
20. சிறிய தட்டுக்களில் சாப்பிடுங்கள். அது நிறை சாப்பிட்ட திருப்தியைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நீராவியில் வேகவைத்த பொருள்களே இதயத்திற்கு என்றும் நல்லது.
22. உணவுக்குப் பின் ஏதேனும் ஒரு பழம் சாப்பிடுங்கள்.
23. ஆழ்நிலைத் தியானம், யோகாசனம், நடைப்பயிற்சி இவை தினசரி வேண்டும். முடியாதவர்கள் மெதுவாக நடந்தாவது பாருங்கள்.
24. நெஞ்சு வலித்தாலோ திடீர் மயக்கம் முற்றுகையிட்டாலோ உடனே மருந்துவரைப் பாருங்கள்.
25. ஒற்றைத் தலைவலி இதய நோயின் ரகசிய அறிகுறி என்பதால், ஆரம்பத்திலேயே விரட்ட முயலுங்கள்.
26. உயரத்திற்கேற்ற உடல் எடை வேண்டும் இதில் குறையிருப்பின் பட்டினி கிடக்காமல் கலோரி மூலமே எடையைக் குறையுங்கள்.
27. மாரடைப்பு நோயிருப்பின் அதையே நினைத்துக் கவலையில் ஆழ்ந்து ஓரேயடியாக மூழ்கிவிடாதீர்கள் ஓய்வெடுங்கள் உற்சாகம் கொள்ளுங் கள் இதயநலம் உங்கள் கையில்.

மேற்கண்டவைகளை விதியாக எண்ணி முகம் சுளிக்காமல், இயல்பான முறைகளாக மாற்றிக் கொண்டால், இதயம் நமக்குள். சீனி : சில கசப்பான உண்மைகள் மனிதன் அதிகம் உண்ணும் சத்தில்லாத உணவுகளில் சீனியும் உடலுக்கு சக்தி தேவைப்படும்போது இதய உணவுகள் குளுக்கோஸ் ஆக மாற்றப்படுகின்றன. உடலுக்கு எவ்வித சத்தையும் தராத சீனி உடலின் சத்தையும் ஈர்த்துக் கொள்கிறது. சிகரெட்டு, மது முதலியவற்றைவிட சீனி ஆபத்தானது. புற்றுநோய், எழும்பு முறிவு, மூட்டு வியாதிகள் உடல் பருமன் இதய நோய்கள், இரத்தஅழுத்தம் சரும நோய்கள் விரைவில் முதிர்ச்சி, பித்தக்கல், ஈரல் நோய், சிறுநீரகக் கோளாறு, சொத்தைப் பல், பெண்ணுறுப்பு தொற்று நோய், அளவுக்கு மீறிய சுறுசுறுப்பு, வன்செயல், நீரிழிவு நோய் இவைகள் சீனியால் விளையும் சீதனங்கள் டின் பானங்கள் செயற்கை சத்துணவுகளில் சீனி அதிகம் சேர்க்கப்படுகிறது. குளிர்பானம் ஐஸ்கிறிம், சாக்லேட் இவைகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதை நிறுத்துவது நல்லது. இனிப்பு அதிகம் உட்கொள்ளும் போது வாயில் உள்ள பாக்டீரியாக்கள் சேர்ந்து அமிலம் உருவாகி, அதன் மூலம் எம்மால் அரிக்கப்பட்டு பற்கள் ஓட்டையாகின்றன. மேலும் அதிகமான சீனி ஒருவரின் தசை நார்களைச் சாகடித்து மாரடைப்பு வரை கொண்டு போகிறது.

தினமும் 24 தேக்கரண்டி உணவில் சேர்த்தால் அது 92 சதவிகித வெள்ளை இரத்த அணுக்கள் உருவாவதைத் தடுக்கிறது. இந்த வெள்ளை அணுக்களே அபாயமான பாக்டீரியாக்களை எதிர்ப்பவை என்பதை நாமறிவோம். எனவே நீர் காப்பிகளில் சீனியைக் குறையுங்கள். தேவையற்ற இனிப்புக்கு அடிமையாகி வாழ்நாளை அதற்கு இரையாக்கி விடாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்டத்திலுள்ள முக்கிய தொலைபேசி எண்கள்

### Hospital (வைத்தியசாலைகள்)

| Name | Phone Numbers |
|---|---|
| 1. Base Hospital Manthikai | 021-2263261 |
| 2. Cancer Hospital Tellipalai | 021-2228478 |
| 3. Central Nursing Home | 021-2222263 |
| 4. Co-operative Hospital Society | 021-2226474 |
| 5. Director Teaching Hospital Jaffna | 021-2223348<br>021-2227764 |
| 6. Base Hospital Chavakachcheri | 021-2228479 |
| 7. Divisional Hospital Chankanai | 060-2216574<br>060-2216029 |
| 8. Divisional Hospital Karainagar | 060-2216573 |
| 9. Base Hospital Delft | 060-2213577 |
| 10. Base Hospital Kayts | 060-2212660 |
| 11. Divisional Hospital Kopay | 021-2229970 |
| 12. Divisonal Hospital Valvetythurai | 060-2212661 |
| 13. Base Hospital Tellipalai | 060-2212614 |
| 14. General Hospital Jaffna | 021-2222260 |
| 15. Green Memorial Hospital Manipay | 021-2222747 |
| 16. Holy Cross Mother Center | 021-2229639 |
| 17. Holy Cross Mother Center | 021-2222512 |
| 18. Mendal Health Society, Thellipallai | 021-2229853 |
| 19. MOH, Mallagam | 060-2216040 |
| 20. MOH, Actuvelly | 060-2216037 |
| 21. Moolai Co-operative Hospital | 021-2226474 |
| 22. Nureses Training Center | 021-2222736 |
| 23. Vetrinary Hospital | 021-2222342 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D.S.Office (பிரதேச செயலகங்கள்)

| | Name | Phone Numbers |
|---|---|---|
| 1. | Kachcheri | 021-2222209 |
| 2. | Chankanai | 021-2223954, 060-2216003 |
| 3. | Chavakachcheri | 021-2226171, 060-2216009 |
| 4. | Jaffna | 021-2222209, 021-2227536 |
| 5. | Karainagar | 021-2226090, 060-2214389 |
| 6. | Kayts | 021-2223955, 060-2214955 |
| 7. | Kopay | 021-2224044, 060-2216421 |
| 8. | Maruthankerney | 060-2214851 |
| 9. | Nallur | 021-2222208, 060-2214167 |
| 10. | Pallai | 060-2212290 |
| 11. | Pointpedro | 021-2263259, 060-2215044 |
| 12. | Sandilipay | 021-2223951, 060-2216452 |
| 13. | Thellipalai | 021-2223952, 060-2217333 |
| 14. | Uduvil | 021-2223933, 060-2214696 |
| 15. | Velanai | 021-2229974, 060-2215021 |

## Jaffna Kachcheri (மாவட்டச் செயலகம்)

| | Name | Phone Numbers |
|---|---|---|
| 1. | Accountant | 021-2222771 |
| 2. | Additional Govt.Agent | 021-2222236 |
| 3. | Asst.Commissioner of Motor Trafic | 021-2223789 |
| 4. | Chief Accountant | 021-2222398 |
| 5. | Election Office | 021-2222655 |
| 6. | Govt.Agent | 021-2222235 |
| 7. | Hindu Relious Affairs | 021-2225613 |
| 8. | Land Registry | 021-2222475 |
| 9. | Media Centre | 021-2223767 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. Ministry of Hindu Affairs 021-2225613
11. NECORD 021-2225163
12. NEIAP 021-2225068
13. Project Director 021-2222774
14. PD Kondavil Food Stores 060-2214772
15. Dept.of Registration of person 021-2225052
16. UNHCR Micro Project 021-2225593
17. World Food Program 021-2229716
18. Planning Section 021-2222427

## Post Office (அஞ்சல் அலுவலகங்கள்)

| Name | Phone Numbers |
|---|---|
| 1. Channkanai Post Office | 021-2227523 |
| 2. Chavakachcheri | 021-2227062 |
| 3. Deputy post Master General | 021-2227136 |
| 4. Divisupt of Post Office | 021-2222256 |
| 5. Karainagar Post office | 021-2227089 |
| 6. Kopay post office | 021-2226978 |
| 7. Post office point pedro | 021-2263250 |
| 8. Pandatheruppu post office | 021-2227570 |
| 9. Post Office Chunnakam | 021-2213169 |
| 10. Post office of Karaveddy | 021-2263252 |
| 11. Post office Analaithevu | 060-2212346 |
| 12. Chundikuli | 021-2222550 |
| 13. Eluvathivu | 060-2212347 |
| 14. Jaffna | 021-2222250 |
| 15. Karanavai | 021-2263009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.Kayts 021-2222400
17.Kodikamam 021-2264058
18.Kokuvil 021-2225015
19.Manipay 021-2222650
20.Manthikai 021-2263251
21.Nainathivu 060-2212345
22.Urupirai 021-2222447
23.Vannarpannai 021-2225017
24.Velanai 021-2222533
25.VVT 060-2213098
26.Kaithady 021-2222402
27.Thellipalai 021-2227532
28.Vaddukoddai 021-2227426

## Bank Telephone numbers (வங்கிகள்)

| Bank | Jaffna Stanley Road | Jaffna | Chunnakam | Nalliyaddy | Manipay |
|---|---|---|---|---|---|
| Bank of Ceylon | 021-2222598 | 021-2222735 | 021-2223969 | 021-2263260 | 021-2222603 |
| Peples Bank | 021-2226386 | | 021-2227090 | 021-2263256 | 021-2216450 |
| National Saving Bank | 021-2222696 | 021-2229808 | 021-2224033 | | 021-2224026 |
| Commericial Bank | 021-2229821 | 021-2222176 | 021-2229675 | 021-2263785 | |
| HNB | 021-2228410 | 021-2223194 | | 021-2264149 | 021-2229682 |
| Seylan Bank | 021-2225073 | 021-2228224 | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதி அவசர தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| யாழ் போதனா வைத்தியசாலை | 021 222 3348 |
| திருநெல்வேலி நேர்சிங் ஹோம் | 021 222 2263 |
| கோலிகுறஸ் | 021 222 2512 |
| அப்பலோ வைத்தியசாலை | 021 222 3305 |
| சம்பந்தர் சிகிச்சை நிலையம் | 021 222 7259 |
| யாழ் பொது நூலகம் | 021 222 2019 |
| யாழ் மத்திய பேரூந்து நிலையம் | 021 222 2281 |
| கோண்டாவில் பஸ் டிப்போ | 021 222 2207 |
| யாழ் மாநகரசபை | 021 222 2275 |
| யாழ் மின்சார சபை | 021 222 2496 |
| யாழ் தீயணைக்கும் படை | 021 222 3556 |
| யாழ் செயலகம் | 021 222 2235 |
| யாழ் பிரதேச செயலகம் | 021 222 2209 |
| யாழ் பொலிஸ் நிலையம் | 021 222 2222 |
| யாழ் தபாலகம் | 021 222 2250 |
| யாழ் நீதிமன்றம் | 021 222 2357 |
| சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் | 021 222 2026 |
| உதயன் | 021 222 2030, 021 222 2083 |
| வலம்புரி | 021 222 2030 |
| தினக்குரல் | 021 222 2127 |
| EXPO விமான சேவை | 021 222 6997 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது சகோதரி

அமரர்

## கமலாம்பிகை வல்லிபுரம்

அவர்கள் பண்பின் உறைவிடமாகத் திகழ்ந்து எல்லோர்
உள்ளங்களையும் இனிய வார்த்தைகளால் கவர்ந்து பலனை
எதிர்பாராமல் வேண்டியவர்களுக்குத் தனது உதவிகளை வழங்கி
வாழவைத்து திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எம்மை
விட்டுச் சென்ற செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து சகல
வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்
தொலைபேசி மூலம் அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில்
பங்குபற்றியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

முருகேசு + சிவகா

- வல்லிபுரம் + செல்லம்மா
  - யோகாம்பிகை + பாலச்சந்திரன்
    - ஜெகன்மோகன் + கல்யாணி
      - அர்ச்சனா
      - அர்ஜுன்ஹரிஷ்
    - மோகனசுதன் + காமிலா
      - அன்வர்
      - அகில்
  - சிவஞானம் + அருளம்மா
  - ஜெதாம்பிகை + சிவராமலிங்கம்
  - ஆனந்தசிவம் + இந்திராதேவி
    - சிவப்பிரியன் + இந்துநில்
      - தனுராஜ்
      - கௌதம்
    - லாவண்யா
  - கமலாம்பிகை
- சின்னையா + பாறுபதி
  - நவரத்தினம்
  - சதானந்தம்
  - துரையன்
  - குலக்கொழுந்து
  - செல்வராசா
- சின் + சிதம்
  - இரா
  - ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளி

+ சிவகாமி

சின்னப்பிள்ளை
+
சிதம்பிரப்பிள்ளை
↓
இராசரத்தினம்
பாக்கியம்

பாறுபதி
+
தம்பிப்பிள்ளை
↓
கந்தசாமி (சீனி)
சுப்பையா (கணேஷ்)
சிவகாமி

பிகை

லலிதாம்பிகை

ஞானாம்பிகை
+
நல்லநாதன்
↓
மோகனமுரளி
ஜனகன்

கங்காதரன்

ஸ்ரீதரன்
+
தவமணிதேவி
↓
அம்பிகா
பிரியதர்ஷன்

ராதாமனோகரன்
+
மாலதி


அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org